**கவனிக்க.-** *2010.06.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 1659 - 2010 ජූනි 18 වැනි සිකුරාදා - 2010.06.18

*1659 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1078 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | – |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1082 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1085 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## வாரியபொல பிரதேச சபை

பதவி வெற்றிடங்கள்

வடமேல் மாகாண அரச சேவையில் வாரியபொல பிரதேச சபையில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுந்த தகைமை உள்ள, வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிவு உள்ளோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(வாரியபொல பிரதேச சபையில் தற்போது நிரந்தர சேவையில் உள்ளோர் அத்துடன் சமயோசித, தற்காலிக, பிரதியீட்டாளர், கொடுப்பனவு சேவையாளர் ஆகியோருக்கு மேலதிக தகைமைகளாக கருதப்படும்)

| பதவிப்பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| | 03 | | |
| சாரதி - தரம் III | 01 | PL – 3 – 06 – 2006 (iv)<br>ரூபா 12,470 –10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 × 170 - ரூபா 18,860 | 8 ஆம் வகுப்பு /9 ஆம் வகுப்பு சித்தி அடைதல், தொழிற் தகைமை தனியார்/வாடகை. வாகன நிறை 24 தொன்னுக்கு குறைவான வெகன் முற்சக்கர வண்டி, உழவு வண்டி, ஓட்டுவதற்கான மோட்டார் வண்டி ஆணையாளர் மூலம் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>திணைக்களத்தில் ஒரு பிரதி நிதியும் மோட்டார் வாகனப்போக்குவரத்து திணைக்களத்தின் வாகன போக்குவரத்து பரிசோதகரும், பொலிஸ் வாகன போக்குவரத்து பிரிவில் அதிகாரியும் சேர்ந்த ஒரு குழு மூலம் வாகனம் செலுத்தும் தேர்ச்சியை அளவீடு செய்யும் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br>சாரதியாக 03 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படவேண்டும்) உயரம் 05 அடி |
| குழாய்க் கிணறு திருத்துனர் (பயிற்றப் படாதவர்) - தரம் III | 01 | PL – 2 – 06 – 2006 (ix)<br>ரூபா 12,210 –10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 × 170 - ரூபா 18,600 | க. பொ. த. (ச/த) பரீட்சையில் 02 பாடங்கள் ஒரே தடவையில் சித்தி<br>குறைந்த தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

**குறிப்பு**.- சாரதிப் பணிக்கு பகல் வேளையிலும் இரவு வேளையிலும் சேவை செய்ய வேண்டி இருப்பதால் சிறந்த உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும். சிறந்த கண்பார்வை இருக்க வேண்டும். நெடுஞ்சாலை போக்குவரத்து சட்ட திட்டங்கள் பற்றி நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

2. **குறித்த பதவிக்கான வேறு பொதுத் தகைமைகள்**.- (1) வாரியபொல தேர்தல் தொகுதியில் குறைந்தபட்சம் 03 வருடம் நிரந்தர வதிவிடவாளராக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பம் செய்யும் இறுதி தினத்திற்கு வயது 18க்கு குறையாமலும் 45க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (அரசசேவை அல்லது மாகாண சேவையில் நிரந்தர சேவையில் இருப்போருக்கு வயது எல்லை இல்லை)

(3) விண்ணப்பதாரி இலங்கை பிரசை ஆக இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பதாரி சிறந்த ஒழுக்கமும் உடற் தகுதியும் இருத்தல் வேண்டும்.

(5) தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகவோ மாகாணச் சேவையில் நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

3. **ஆட்சேர்ப்பு முறையும் விண்ணப்பிக்கும் முறையும்**.- (1) சேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு முறையான நேர்முகப்பரீட்சையும் செயல் முறை பரீட்சையும் நடாத்தி அதன்பின் தகுந்தோர் தெரிவு செய்யப்படும்.

(2) தற்போது இச்சபையில் குறித்த பதவிக்கு தற்காலிகமாக/சமயோசித/பிரதியீட்டாளர் /கொடுப்பனவு முறையில் சேவை செய்தல் ஆகியோருக்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.

(3) விண்ணப்பதாரி இங்கு குறித்த விண்ணப்பப்படிவத்தை ஒழுங்கான முறையில் நிரப்பி 2010.06.30 திகதிக்கு முன் "செயலாளர், வாரியபொல பிரதேச சபை" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

(4) விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையில் இடப்பக்க மேல் மூலையில் 'குறித்த பதவியை', குறிப்பிட்டு அனுப்பவேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

5. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விப் பெறுபேறுகளின் சான்றிதழ் ;
(இ) வதிவிடம் உறுதிப்படுத்தும் பிரதேசச் செயலாளர் அத்தாட்சிப் பத்திரம் ;
(ஈ) அண்மையில் பெற்ற நற்சான்றிதழ் (ஒன்று, கிராம சேவகர் நற்சான்றிதழ்) ;
(உ) தொழில் /அனுபவம் பற்றிய சான்றிதழ்.

6. இவ் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவோ, இடையில் அல்லது பதவிச் சேர்ப்பு செய்வதை காலம் தாழ்த்தவோ அல்லது மாற்றம் செய்யவோ இவ்வறிவித்தலை இரத்துச் செய்யவோ அதிகாரம் பிரதேச சபை செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

7. குறைந்தபட்ச தகைமைகள் உள்ள விண்ணப்பத்தாரிகளுக்கு மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

வை. எம். சேனாநாயக்கா,
செயலாளர்.
வாரியபொல பிரதேச சபை.

2010. 05. 24.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வாரியபொல பிரதேச சபை**

.......................... பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முழுப் பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :- வருடம் :----. மாதம் :----. திகதி :----.
4. ஆண்/பெண் :----.
5. திருமணமானவரா/திருமணமாகாதவரா :----.
6. இனம் :----.
7. நீங்கள் இலங்கைப் பிரசையா? அப்படியாயின் பரம்பரையானவரா பிரஜா உரிமை பெற்றவரா என்ற விபரம் :----.
8. கல்வித் தகைமை :----.
9. தொழிற் தகைமையும் அனுபவமும் :----.
10. நீங்கள் தற்போது இந்நிறுவனத்தில் பிரதியீட்டாளராக சேவை செய்பவராயின் சேவைகாலமும் விபரம் :-
    இப் பதவி தன்மை (நிரந்தரம்/சமயோசிதம் /தற்காலிகம் /பிரதியீட்டாளர் /கொடுப்பனவு முறையில்)

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதி கூறுகின்றேன். இங்கு தரப்பட்ட விடயங்கள் பொய்யானவை என்று இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் அறிந்து கொள்ளப்பட்டால், நான் தகுதியற்றவன் என்றும் தேர்ந்து எடுத்தபின் அறிந்தாலும் எவ்வித கொடுப்பனவும் செலுத்தாமல் சேவையில் இருந்து நீக்க முடியும் என்பதை நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

(தற்போது சேவையில் உள்ளோருக்கு மட்டும்)

விண்ணப்பதாரியின் மேற்கூறிய விடயங்கள் உண்மையானவை என்றும் தெரிவு செய்தால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்பதை தெரிவிப்பதுடன் விண்ணப்பதாரி தற்போது -------------------- ஆக சேவை செய்கின்றார் என்பதை சான்றுப்படுத்துகின்றேன்.

-------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

6 - 253

## பூஜாபிட்டி பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையின் வெற்றிடங்களை நிரப்புதல்

பூஜாபிட்டி பிரதேச சபையில் தற்போது நிலவும், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகுதியான, மத்திய மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்பி, "செயலாளர், பூஜாபிட்டி பிரதேச சபை, பூஜாபிட்டி" என்ற முகவரிக்கு 2010.07.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப்பெயர் | வெற்றிடம் | சம்பள வகுதி, தொகை, சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| 01 | பேக்ஹோ லோடர் இயக்குபவர் | 01 | PL3(06/2006W) ரூபா 12,470 –10 X 130 – 10×145-10×160- 10 X 145 – 10 X 160 – 12 × 170 - ரூபா 18,860 | குறைந்தபட்சம் 8 ஆம் தரமேனும் சித்தி அடைந்திருத்தல் | 34 அந்தர் நிறையைவிடக் கூடிய மோட்டார் வாகனங்களையும் ட்ரேலர்களையும் மற்றும் 30 பயணிகளைவிடக் கூடிய தொகையினரை ஏற்றிச் செல்லும் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பஸ் வண்டிகளையும் செலுத்துவதற்கான மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ('ஏ'தரச்) தகவு திறன் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>பெக்ஹோ இயந்திரம் இயக்குபவராக மூன்று வருடகால சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>குறைந்தபட்ச உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும். |

**ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்.-** (1) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரி மத்திய மாகாணத்திற்குள் 2010.07.15 ஆந் திகதிக்கு முன்னர் உள்ள 03 வருடகாலத்துக்குக் குறையாத நிரந்தரக் குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச மற்றும் மாகாண அரச சேவையின் நிரந்தரப் பணியாளர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை கருதப்படமாட்டாது) ;

(4) விண்ணப்பதாரி நல்ல திடகாத்திரமான உடல்நிலையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(5) சேவையின் தேவைக்கேற்றவாறு முறையான நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும், செய்முறைப் பரீட்சை ஒன்றின் மூலமும் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர் ;

(6) விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின்னரோ அல்லது கோரப்பட்ட நிலையிலோ உள்ள காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தவும், இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யவும் அல்லது திருத்தங்கள் செய்யவும் உள்ள அதிகாரம் பூஜாபிட்டிய பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

**சேவையில் ஈடுபடுத்தும் விதிகள்.-** (1) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்து உடையதுமாகும் ;

(2) நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும் ;

(3) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக, இலங்கையின் தாபனக் கோவையின் விதிகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது பூஜாபிட்டிய பிரதேச சபையின் செயலாளர் வெளியிடும் நியமங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படக் கடப்பாடு உடையவராவார்.

**விண்ணப்பிக்கும் முறை.**- இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய 12" × 8" விண்ணப்பத்தைத் தயாரித்து, விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, "செயலாளர், பூஜாப்பிட்டி பிரதேச சபை, பூஜாபிட்டி" என்ற முகவரிக்கு 2010.07.15 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.) குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட குணச்சான்றிதழ்கள் இரண்டு ;
(5) தொழிற் தகைமைச் சான்றிதழ்கள் ;
(6) ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(7) தொழில் அனுபவத்தைக் காட்டும் சான்றிதழ்கள்.

செயலாளர்,
பூஜாபிட்டி பிரதேச சபை,
பூஜாபிட்டி.

பூஜாபிட்டி பிரதேச சபை அலுவலகம்,
பூஜாபிட்டி,
2010. 05.15.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பூஜாபிட்டி பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையின் பூஜாபிட்டி பிரதேச சபையில்
.......................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் : ஆண்/பெண் :----.
6. பிறந்த திகதி : வருடம் :----, மாதம் :----, திகதி :----.
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறான வயது : வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழிற் தகைமைகள் : (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்) :----.
10. சேவை அனுபவம் :----.
11. நீங்கள் ஏதேனும் குற்றமொன்றுக்காக நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளி எனக் கருதப்பட்டவரா? :----.

மேலே தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு முறையின் நிபந்தனைகளுக்கு அமைய என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனத்துக்குப் பின்னரெனின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் பணியாற்றும்**
**விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரது சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் தற்போது இந்தத் திணைக்களத்தில்/நிறுவனத்தில் ...................... ஆகப் பணியாற்றுகின்றார். அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. எந்த வகையிலும் அவர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படவில்லை என உறுதிப்படுத்துவதுடன் அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்து முன்வைக்கிறேன்/ முன்வைக்கவில்லை.

-------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களத் தலைவரது பதவி முத்திரை :----.
திகதி :----.

6 - 362

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஸ்ரீ ஜயவர்னபுர கோட்டே மாநகர சபை

இலங்கை அரச சட்ட வரைபின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளை சட்டம்

**37 (1) 'ஆ' பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

இலங்கை அரச சட்ட வரைபின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 37 (1) 'ஆ' பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் வகையில் வீதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு உரித்தானது என தங்களுக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

தற்பொழுது மாநகர சபையினால் அளக்கப்பட்டு குறியீடு இடப்பட்ட வீதிகள் தொடர்பாக இடத்தின் உரிமையாளர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவித்தல் விடுக்கப்பட்டு ஒரு மாத காலத்துள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படல் வேண்டும் என்று தெரிவிக்கின்றேன்.

சாந்தா பி. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
மாநகர சபை.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை அலுவலகம்,
2010.05.12.

| தொடர் இல. | வீதியின்பெயர் | எல்லை தொடக்கம் வரை | நீளம் அடி | அகலம் அடி |
|---|---|---|---|---|
| 01 | ராஜகிரிய, நாவல வீதி, குருந்துவத்த பள்ளிய ஒழுங்கை வரி இல. 113/10, 113/101/1, 113/11 113/12ஏ, 113/12 பி வீடுகளுக்குச் செல்லும் உப வீதி | வரி இல. 113/10 தொடக்கம் வரி இல. 113/12 பி வரை | 160' | 12' |
| 02 | ராஜகிரிய, ராஜகிரிய பூங்கா வரி இல. 13/பி, 615/3/3, 615/7, 615/9, 615/10, 615/26, 615/33, 1366 1/1 உட்புகும் வீதி | வரி இல. 13/பி, தொடக்கம் வரி இல. 1366 1/1 வரை | 350' | 20' |
| 03 | கோட்டை அழகேஸ்வர் வீதி முடிவடையும் வரி இல. 185 தொடக்கம் இல. 185/20 வரை உப வீதி | வரி இல. 185 தொடக்கம் இல. 185/20 வரை | 416' | 15'-7" |

6-256

**ஹபராதுவ பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்*

***24 (1) (ஆ) ஆம் பிரிவின்கீழ் பிரகடனம் செய்யப்படும் அறிவித்தல்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில் ஹபராதுவ பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதிகள் ஹபராதுவ பிரதேச சபைக்குச் சொந்தமானது என்று இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*இது சம்பந்தமாக பிரதேசத்தின் பொது மக்களாலோ அல்லது வீதிகளுக்குச் சம்பந்தப்பட்ட காணிக்கு சொந்தம் கூறப்படும் பிரசைகளோ அல்லது எதிர்ப்பு தெரிவிப்பவர்களோ இருப்பின் அதற்கான நியாயமான காரணங்கள், ஆவணங்களுடன் உரிய ஆட்சேபனைகளை இவ்வறிவித்தல் பிரகடனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத கால எல்லைக்குள் அவர்களுடைய உரிமையை நிரூபிக்கும் நோக்கமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின் பிரகாரம் செயல்முறைகளில் ஈடுபடலாம் என்பதை இத்தால் பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.*

*இக்கால எல்லைக்குள் எதுவிதமான எதிர்ப்புக்களோ ஆட்சேபனைகளோ கிடைக்காவிட்டால், அவ்வட்டவணையில் குறிப்பிட்டிருக்கும் வீதிகள் ஹபராதுவ பிரதேச சபைக்கு சொந்தமான என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிபாலனம் செய்யப்படும் என்று பொதுமக்களின் அறிவித்தலுக்காக பகிரங்கமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஏ. பந்துபால அபேகோன்,*
*தலைவர்,*
*ஹபராதுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை பிரதான அலுவலகம்,*
*ஹபராதுவ.*
*2010.05.31.*

***அட்டவணை***

*வீதியின் பெயர் : அஹங்கம திகறத்த வேல்லகொட வத்த வீதி*
*தொடக்கம் : முனிதாச மாவத*
*முடிவு : வீடுகளில்*
*வீதியின் நீளம் : 212 மீற்றர்*
*வீதியின் அகலம் : 363 மீற்றர் (3.63)*
*கிராமசேவையாளர் பிரிவு : 157 அஹங்கம மத்தி*

*இடதுபக்கம் :*

| | |
|---|---|
| 1. தவர்தன அரங்கி பன்சல | |
| 2. திரு. என். ஜீ. சந்திரசேன பியிங்ஹ | ஜம்புகஹ வத்த காணி |
| 3. திரு. எச். ஜீ. சமரசிறி | வேல்லகொடவத்த |
| 4. திருமதி கே. ஐறின் | வேல்லகொடவத்த |

*வலதுபக்கம் :*

| | |
|---|---|
| 1. திரு. டபிள்யு. பிரேமசிங்ஹ | தங்கஹலியத்த வயல் |
| 2. திரு. சந்தன அபேசுந்தர | கொடகே வயல் |
| 3. திரு. ஏ. வீ. நிமல் றஞ்சித் | திவெல் வயல் |
| திரு. ஏ. வீ. சுவர்ணலதா | |
| 4. திருமதி ரீ. றஞ்சனி | கலவிற்ற காணி |
| திருமதி ரீ. இந்திராணி | |

*6-315/1*

**ஹபராதுவ பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்*

***24 (1) (ஆ) ஆம் பிரிவின்கீழ் பிரகடனம் செய்யப்படும் அறிவித்தல்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில் ஹபராதுவ பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீதிகள் ஹபராதுவ பிரதேச சபைக்குச் சொந்தமானது என்று இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*இது சம்பந்தமாக பிரதேசத்தின் பொது மக்களாலோ அல்லது வீதிகளுக்குச் சம்பந்தப்பட்ட காணிக்கு சொந்தம் கூறப்படும் பிரசைகளோ அல்லது எதிர்ப்பு தெரிவிப்பவர்களோ இருப்பின் அதற்கான நியாயமான காரணங்கள், ஆவணங்களுடன், உரிய ஆட்சேபனைகளை, இவ்வறிவித்தல் பிரகடனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத கால எல்லைக்குள் அவர்களுடைய உரிமையை நிரூபிக்கும் நோக்கமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின் பிரகாரம் செயல்முறைகளில் ஈடுபடலாம் என்பதை இத்தால் பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.*

*இக்கால எல்லைக்குள் எதுவிதமான எதிர்ப்புகளோ ஆட்சேபனைகளோ கிடைக்காவிட்டால், அவ்வட்டவணையில் குறிப்பிட்டிருக்கும் வீதிகள் ஹபராதுவ பிரதேச சபைக்கு சொந்தமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிபாலனம் செய்யப்படும் என்று பொதுமக்களின் அறிவித்தலுக்காக பகிரங்கமாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஏ. பந்துபால அபேகோன்,*
*தலைவர்,*
*ஹபராதுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை பிரதான அலுவலகம்,*
*ஹபராதுவ.*
*2010.05.31.*

***அட்டவணை***

*வீதியின் பெயர் : நாகந்த ஈநியகஹ வீதி*
*தொடக்கம் : அஹங்கம நாகந்த வீதி*
*முடிவு : வீடுகளில்*
*வீதியின் நீளம் : 466 மீற்றர்*
*வீதியின் அகலம் : 363 மீற்றர்*
*கிராமசேவையாளர் பிரிவு : 159 நாகந்த*

*இடதுபக்கம் :*

| | |
|---|---|
| 1. திகறத்த றுலஹாமி | வயல் |
| 2. திருமதி ஏ. வி. லீலாவதி | ஈறியகஹ ஹேனவத்த |
| 3. திரு. ஏ. வி. டீ. பந்துல றணவீற | வயல் |
| 4. புன்சி அலஹேன தெனிய | வயல் |

*வலதுபக்கம் :*

| | |
|---|---|
| 1. திரு. காமினி ஜயதிலக | கநற்துகஹ ஒவிற்ற வயல் |
| 2. திரு. எம். என். எல். விஜேசிங்ஹ | ஈறியகஹ ஹேனவத்த |
| 3. திரு. ஏ. வி. கறுணதாச | ஈறிவகஹ ஹேனவத்த |
| 4. திரு. எல். ஜீ. சந்திரசேன | மஹஹேனவத்த (அரசினால் கொடுபட்ட காணி) |
| 5. திரு. பீ. ஜீ. சமரசேன | மஹஹேன வத்த (அரசினால் கொடுபட்ட காணி) |
| 6. திரு. எம். எம். விஜேதாச | மஹஹேனவத்த (அரசினால் கொடுபட்ட காணி) |

*6-315/2*

# நானாவித அறிவித்தல்கள்

## தங்காலை பிரதேச சபை

வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்தல் – 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆவது பந்தியின் பிரகாரம் தங்காலை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் உப அட்டவணை மூலம் விபரிக்கப்பட்டுள்ளவாறு ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வியாபார நிலையங்களுக்கு, அவ்விடத்தில் வருடாந்த பெறுமதிக்கு ஏற்றவாறு அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றை 2010 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடுவதற்கு தங்காலை பிரதேச சபையின் 2010, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் 3 : 1 இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதிக் கட்டணத்தை 2010, யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பிரதேச சபைக்குச் செலுத்தி உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதையும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

லாலித்த ஆர். வனிகசேகர,
தலைவர்,
தங்காலை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தங்காலை,
நெட்டொல்பிட்டிய,
2010, மே மாதம் 03 ஆந் திகதி.

**அட்டவணை**

| பிரிவு I – ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான வியாபாரத்தின் /வர்த்தகத்தின் தன்மை | பிரிவு II – வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | ரூ. 750 க்கு கீழ் ரூபா ச. | ரூ. 750 - ரூ. 1,500 ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 1. பேக்கரி நடத்துதல் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 2. சாப்பாட்டுக் கடை நடத்துதல் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 3. தேநீர், கோப்பிக் கடை நடத்துதல் | 150 0 | 250 0 | 450 0 |
| 4. சிற்றுண்டிச்சாலை நடத்துதல் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 5. விடுதி வசதியுடன் ஹோட்டல் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. விடுதி வசதியற்ற ஹோட்டல் நடத்துதல் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 7. தங்குமிடம் நடத்துதல் | 450 0 | 600 0 | 900 0 |
| 8. ஐஸ் கிரீம் விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 9. பழச்சாறு, பழரசம் உற்பத்தி நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 10. குளிர்பான பெக்கட் உற்பத்தி செய்தல் | 250 0 | 350 0 | 450 0 |
| 11. பலகார உற்பத்தி நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 12. பொரியல் உற்பத்தி, விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 13. யோகட் உற்பத்தி, விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 550 0 |
| 14. வாசனைத் திரவியம், உணவு வகை, சாப்புச் சாமான் விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 450 0 | 700 0 |
| 15. வாசனைத் திரவியம், உணவு வகை, சாப்புச் சாமான் விற்பனை நிலையம் நடத்துதல் (மொத்த விற்பனையுடன்) | 450 0 | 700 0 | 1,000 0 |
| 16. வாசனைத் திரவியம் தூள் செய்து பக்கெட் பண்ணி விற்பனை செய்யும் நிலையம் நடத்துதல் | 350 0 | 500 0 | 750 0 |
| 17. அரைக்கும் நிலையம் நடத்துதல் | 350 0 | 450 0 | 750 0 |
| 18. காளான் வியாபாரம் நடத்துதல் | 300 0 | 500 0 | 600 0 |
| 19. உல்லாச விடுதி நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. அதிதிகள் இல்லம் நடத்துதல் | 250 0 | 450 0 | 700 0 |
| 21. உல்லாச பயணிகளுக்கான ஹோட்டல் (உல்லாச பயணச் சபையில் பதிவு செய்யப்படாதது) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. உல்லாச பயணிகளுக்கான ஹோட்டல் (உல்லாச பயணச் சபையில் பதிவு செய்யப்பட்டது) | | அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது | |

| பிரிவு I<br>ஆபத்தானதும் அருவருக்கத்தக்கதுமான<br>வியாபாரத்தின் /வர்த்தகத்தின் தன்மை | பிரிவு II<br>வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | ரூ. 750 க்கு கீழ்<br>ரூபா ச. | ரூ. 750 - ரூ. 1,500<br>ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல்<br>ரூபா ச. |
| 23. ஐஸ் கிரீம், குளிர்பான பெக்கட் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 24. உல்லாச வியாபார அனுமதிப்பத்திரம் | 250 0 | 450 0 | 700 0 |
| 25. சமைக்கப்பட்ட மீன் தொடர்பான உணவு வியாபாரம் | 250 0 | 450 0 | 700 0 |
| 26. ஐந்து பசுக்களுக்கு குறைவற்ற மாட்டுப் பண்ணை நடத்துதல் | 250 0 | 350 0 | 700 0 |
| 27. மீன் விற்பனை நிலையம் நடத்துதல் | 450 0 | 600 0 | 900 0 |
| 28. மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. மாடு அறுக்கும் இடம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. மாட்டிறைச்சி தவிர்ந்த ஏனைய இறைச்சி விற்பனை நிலையம் நடத்துதல் | 550 0 | 750 0 | 1,000 0 |
| 31. கோழி 25 க்கு மேல் 100 க்கு உட்பட்ட கோழிப் பண்ணை நடத்துதல் | 250 0 | 750 0 | 900 0 |
| 32. கோழி 100 க்கு மேற்பட்ட கோழிப் பண்ணை நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33. கோழிக் குஞ்சு விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 450 0 | 700 0 |
| 34. கருவாடு, மாசிக் கருவாடு உலர்த்தும் நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 450 0 |
| 35. நகர எல்லைக்குள் நடமாடும் மீன் விற்பனை | 300 0 | 450 0 | 700 0 |
| 36. குளிரூட்டப்பட்ட இறைச்சி, மீன் விற்பனை நிலையம் நடத்துதல் | 250 0 | 450 0 | 700 0 |
| 37. மீன் ஜாடியிடல் உலர்த்துதல், உப்பிடல் நிலையம் நடத்துதல் | 250 0 | 450 0 | 600 0 |
| 38. கருவாடு, மாசிக் கருவாடு அல்லது மீன் ஜாடியிட்டு களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்துதல் | 250 0 | 450 0 | 600 0 |
| 39. தனிப்பட்ட சந்தை நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. நெல் ஆலை நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. முடி வெட்டும் நிலையம் நடத்துதல் | 300 0 | 500 0 | 700 0 |
| 42. கருங்கல் குழி நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43. கருங்கல் தூளாக்கும் நிலையம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. சலவை நிலையம் நடத்துதல் | 250 0 | 350 0 | 500 0 |
| 45. சுண்ணாம்பு பண்டகசாலை, விற்பனை நிலையம் நடத்துதல் | 300 0 | 500 0 | 600 0 |
| 46. விற்பனைக்காக கொங்றீற்றுக் கல் உற்பத்தி செய்தல் (இயந்திர மயமல்லாத) | 250 0 | 350 0 | 450 0 |
| 47. விற்னைக்காக கொங்றீற்றுக் கல் உற்பத்தி செய்தல் (இயந்திர மய) | 500 0 | 700 0 | 900 0 |
| 48. ஐஸ் உற்பத்தி நிலையம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. இறப்பர் கலந்த தும்பு மெத்தை உற்பத்தி நிலையம் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. பழங்கள், மீன் அல்லது வேறேதாவது உணவு வகை பக்கெட் பண்ணும் நிலையம் நடத்துதல் | 300 0 | 500 0 | 750 0 |
| 51. விவசாய இரசாயனப் பொருள் விற்பனை நிலையம் நடத்துதல் | 300 0 | 500 0 | 700 0 |

***கவனிக்க.*** *- 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை உல்லாச சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஹோட்டல் ஒன்று, சிற்றுண்டிச்சாலை அல்லது விடுதி என்னும் போது, கட்டணம் அறவிடப்படும் வருடத்துக்கு முன்னைய வருடம் அந்த ஹோட்டலினால், சிற்றுண்டிச்சாலையினால், விடுதியினால் கிடைத்த வரவுகளின் 1% அதிகப்படியானதாக வேண்டும். அந்த ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை, விடுதி என்பன செயற்படும் முதல் வருடம் எனின் அக்கட்டணம் அவ்விடத்தின் வருடாந்த பெறுமதி மீது தீர்மானித்து அறவிடப்படல் வேண்டும்.*

**திம்புலாகல பிரதேச சபை**

*அனுமதிப்பத்திர கட்டணம் - 2010*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 149 ஆம் சரத்தின் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ்க்காணும் ஆலோசனை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*எஸ். ஜகத் சமரவிக்ரம,*
*தலைவர்,*
*திம்புலாகல பிரதேச சபை.*

*திம்புலாகல பிரதேச சபை அலுவலகம்,*
*2009, நவெம்பர் 30.*

**ஆலோசனை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அல்லது அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட உப நியதிச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் விடயங்களுக்காக திம்புலாகல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதும் ஒரு இடத்தை பாவிப்பதற்கு அதிகாரம் வழங்கி பிரதேச சபையினால் 2010 ஆம் வருடத்தில் விநியோகிக்கப்படுகின்ற ஏதும் அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக இந்த அட்டவணையில் II ஆம் நிரலில் உள்ள குறிப்பின்கீழ் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நியமித்து அறவிடல் வேண்டுமென்று ஆலோசிக்கின்றேன்.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|
| வியாபாரத்தின் தன்மை | வருடாந்த பெறுமதி ரூ. 750 க்கு மேற்படாத ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 1. தங்குமிடம் ஒன்றை நடாத்துவதற்கு | 350 0 | 750 0 | 1,000 0 |
| 2. ஹோட்டல் ஒன்றை நடாத்துவதற்கு | 350 0 | 750 0 | 1,000 0 |
| 3. சோற்றுக்கடை ஒன்றை நடாத்துவதற்கு | 350 0 | 750 0 | 1,000 0 |
| 4. சாப்பாட்டுக்கடை ஒன்றை நடாத்துவதற்கு | 400 0 | 750 0 | 1,000 0 |
| 5. தேனீர் கடை ஒன்றை நடாத்துவதற்கு | 300 0 | 500 0 | 800 0 |
| 6. கோப்பி கடை ஒன்றை நடாத்துவதற்கு | 300 0 | 500 0 | 800 0 |
| 7. பேக்கரி ஒன்றை நடாத்துவதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. பால் மாட்டுப் பட்டி ஒன்றை நடாத்துவதற்கு | 300 0 | 400 0 | 600 0 |
| 9. பால் விற்பனை செய்வதற்கு | 350 0 | 550 0 | 700 0 |
| 10. மீன் விற்பனை செய்வதற்கு | 400 0 | 600 0 | 700 0 |
| 11. இறைச்சி விற்பனை செய்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. ஐஸ் உற்பத்தி நிலையத்திற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. குளிர்பான உற்பத்தி நிலையத்திற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. லொன்றி ஒன்றை நடாத்துவதற்கு | 300 0 | 550 0 | 700 0 |
| 15. கால்நடைப் பட்டி ஒன்றை நடாத்துவதற்கு | 350 0 | 600 0 | 800 0 |
| 16. தனியார் சந்தை ஒன்றை நடாத்துவதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. சிகை அலங்கார நிலையத்துக்கு | 350 0 | 500 0 | 700 0 |
| 18. முடி வெட்டும் நிலையத்துக்கு | 350 0 | 550 0 | 700 0 |
| 19. மாடு அறுக்கும் இடத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. விழா மண்டபத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. வெளிநாட்டு தொழில் முகவர் நிலையத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |

*எப்படியாயினும் ஏதும் ஒரு இடத்தில் ஹோட்டல் ஒன்று, சாப்பாட்டுக் கடை அல்லது தங்குமிட வசதி உள்ள இடத்தின் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச பிரயாண அபிவிருத்தி சட்டத்தின் விடயங்களுக்காக அந்த ஹோட்டல், சாப்பாட்டுக் கடை அல்லது தங்குமிட வசதி உள்ள இடம் இலங்கை உல்லாச பிரயாண சபையில் பதிவு செய்யப்பட்டதும், அனுமதிக்கப்பட்ட அல்லது*

ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில், அனுமதிப்பத்திரக் கட்டணம் 2007 ஆம் ஆண்டின் அந்த ஹோட்டல், சாப்பாட்டுக் கடை அல்லது தங்குமிட வசதி உள்ள இடத்தின் வருமானத்தின் 1% மாக இருத்தல் வேண்டும்.

06-259/1

---

### திம்புலாகல பிரதேச சபை

கைத்தொழில் கட்டணம் விதித்தல் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 150 ஆம் சரத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட சட்டத்தின் 150 ஆம் சரத்தின் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ் காணும் ஆலோசனை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ். ஜகத் சமரவிக்ரம,
தலைவர்,
திம்புலாகல பிரதேச சபை.

திம்புலாகல பிரதேச சபை அலுவலகம்,
2009 ஆம் ஆண்டு நவெம்பர் 30 ஆந் திகதி.

#### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் சரத்தின் 01 ஆம் உப பிரிவில் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் கீழ் திம்புலாகல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதும் ஒரு இடத்தை பாவிக்கப்படுகின்ற இங்கு அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா கைத்தொழில்களுக்கும் இந்த அட்டவணையில் II ஆம் நிரலில் உள்ள குறிப்பின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அளவு வரியை 2010 ஆம் ஆண்டுக்காக நியமித்து அறவிடப்படல் வேண்டுமென்று ஆலோசிக்கின்றேன்.

#### அட்டவணை

| நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|
| வியாபாரத்தின் தன்மை | வருடாந்த பெறுமதி ரூ. 750 க்கு மேற்படாத ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 1. ஆபரண உற்பத்தி நிலையமொன்றை நடாத்த | 450 0 | 600 0 | 1,000 0 |
| 2. இயந்திரத்தால் அல்லது வேறு வகையில் செங்கற்கள் உற்பத்தி செய்யும் இடத்தை நடாத்த | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. தச்சுத் தொழில் செய்யுமிடத்துக்கு | 350 0 | 600 0 | 800 0 |
| 4. யோகட் உற்பத்தி செய்யுமிடத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. சுண்ணாம்பு போரணை நடாத்துவதற்கு | 500 0 | 600 0 | 800 0 |
| 6. மரம் அறுக்கும் இடத்துக்கு | 400 0 | 600 0 | 800 0 |
| 7. இரும்புக் கம்மலை நடாத்த | 350 0 | 700 0 | 800 0 |
| 8. சுண்ணாம்பு உற்பத்தி நிலையம் நடாத்துவதற்கு | 350 0 | 750 0 | 1,000 0 |
| 9. டயர் டியூப் வோல்கனைஸ் செய்யும் நிலையமொன்றை நடாத்த | 400 0 | 750 0 | 1,000 0 |
| 10. தகர வேலை செய்யும் இடத்தை நடாத்த | 350 0 | 500 0 | 800 0 |
| 11. இரும்புப் பொருள் குடையும் இடத்தை நடாத்த | 400 0 | 500 0 | 800 0 |
| 12. மரத்தளபாட உற்பத்தி நிலையத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்திற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. செங்கற்கள், ஓடு உற்பத்தி நிலையத்திற்கு | 450 0 | 600 0 | 800 0 |
| 15. மட்பாண்டம் உற்பத்தி செய்யுமிடத்துக்கு | 400 0 | 550 0 | 750 0 |
| 16. பாதணி உற்பத்தி செய்யுமிடத்துக்கு | 350 0 | 600 0 | 800 0 |
| 17. பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்யுமிடத்துக்கு | 450 0 | 600 0 | 800 0 |

| நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|
| வியாபாரத்தின் தன்மை | வருடாந்த பெறுமதி ரூ. 750 க்கு மேற்படாத ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 750 முதல் ரூ. 1,500 வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 18. சீமெந்தினாலான பொருட்கள் உற்பத்தி செய்யுமிடத்துக்கு | 350 0 | 700 0 | 900 0 |
| 19. பத்திரிகை, வெற்று கலன்கள், சாக்கு, பழைய இரும்பு, போத்தல் சேர்க்கும் இடத்துக்கு | 350 0 | 500 0 | 750 0 |
| 20. இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி நிலையத்துக்கு | 350 0 | 500 0 | 750 0 |
| 21. மிளகாய், சரக்குகள் அறைக்கும் நிலையத்திற்கு | 350 0 | 500 0 | 750 0 |

6-259/2

---

**திம்புலாகல பிரதேச சபை**

வர்த்தக வரி அறவிடல் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 152 ஆம் சரத்தின் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ் காணும் ஆலோசனை நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ். ஜகத் சமரவிக்ரம,
தலைவர்,
திம்புலாகல பிரதேச சபை.

திம்புலாகல பிரதேச சபை அலுவலகம்,
2009, நவெம்பர் 30.

**ஆலோசனை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 01 ஆம் உப பிரிவில் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் அச்சட்டத்தின் அல்லது அந்தச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட உப நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் அல்லது 150 ஆம் விதிமுறையின்கீழ் தயாரிக்கப்பட்ட உப நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் அல்லது 150 ஆம் விதிமுறையின் கீழ் ஏதும் வரி செலுத்த அவசியம் இல்லாத ஏதும் வர்த்தகங்கள் திம்புலாகல பிரதேச சபை அதிகார எல்லைகள் 2010 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் எல்லா நபர்களிடமிருந்தும் அந்த வர்த்தகத்தின் 2010 ஆம் ஆண்டின் வருமானம் இங்கு அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் விடயங்கள் எல்லைக்குள் இருக்கும் சந்தர்ப்பத்தில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு வரியை 2010 ஆம் ஆண்டுக்கு விதித்து அறவிட வேண்டுமென ஆலோசிக்கின்றேன்.

**அட்டவணை**

| 1 ஆம் பிரிவு<br>2007 ஆம் ஆண்டுக்கான வருமானம் | 2 ஆம் பிரிவு<br>ரூபா ச. |
|---|---|
| ரூபா 6,000 க்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | இல்லை |
| ரூபா 6,000 க்கு மேற்பட்ட எனினும் ரூபா 12,000 க்கு மேற்படாத | 90 0 |
| ரூபா 12,000 க்கு மேற்பட்ட எனினும் ரூபா 18,750 க்கு மேற்படாத | 180 0 |
| ரூபா 18,750 க்கு மேற்பட்ட எனினும் ரூபா 75,000 க்கு மேற்படாத | 360 0 |
| ரூபா 75,000 க்கு மேற்பட்ட எனினும் ரூபா 150,000 க்கு மேற்படாத | 1,200 0 |
| ரூபா 150,000 க்கு மேற்பட்ட | 3,000 0 |

06-259/3

**திம்புலாகல பிரதேச சபை**

*வாகனங்கள் கால்நடைகள் வரி அறவிடல் - 2010*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 ஆம் சரத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 147 ஆம் சரத்தின் 01 ஆம் உப விதியின் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் பொதுவாக பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இருக்கின்ற அல்லது பாவிக்கின்ற எல்லா வாகனங்களுக்கும், கால்நடைகளுக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2010 ஆம் வருடத்திற்காக வருடாந்த வரியை அறவிட வேண்டுமென ஆலோசிக்கின்றேன்.*

எஸ். ஜகத் சமரவிக்ரம,
தலைவர்,
திம்புலாகல பிரதேச சபை.

திம்புலாகல பிரதேச சபை அலுவலகம்,
2009, நவெம்பர் 30.

**ஆலோசனை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 ஆம் சரத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 147 ஆம் சரத்தின் 01 ஆம் உப விதியின் கீழ் திம்புலாகல பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ் பொதுவாக பிரதேச சபை அதிகார எல்லைக்குள் இருக்கின்ற அல்லது பாவிக்கின்ற எல்லா வாகனங்களுக்கும், கால்நடைகளுக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2010 ஆம் வருடத்திற்காக வருடாந்த வரியை அறவிட வேண்டுமென ஆலோசிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | மோட்டார் கார், முச்சக்கர வண்டி, லொறி வண்டி, மோட்டார் சைக்கிள் வண்டில், ரிக்ஷோ, துவிச்சக்கர வண்டி தவிர்ந்த எல்லா வாகனங்களுக்கும் | 25 0 |
| 2. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி அல்லது முச்சக்கர வண்டி அல்லது வண்டில்களுக்கும் | |
| | (அ) வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாயின் | 18 0 |
| | (ஆ) வர்த்தக நடவடிக்கை அல்லாத வேலையில் ஈடுபடுத்துவதாயின் | 4 0 |
| 3. | ஒவ்வொரு வண்டில்களுக்கும் | 10 0 |
| 4. | ஒவ்வொரு கை வண்டில்களுக்கும் | 10 0 |
| 5. | ஒவ்வொரு ரிக்ஷோ வண்டிகளுக்கும் | 7 50 |
| 6. | ஒவ்வொரு குதிரை, போனி, கழுதைகளுக்கும் | 15 0 |
| 3. | ஒவ்வொரு யானைக்கும் | 50 0 |

*26 அங்குலத்துக்கு குறைவான விட்டமுடைய சில்லுகள் உடைய சிறு வாகனங்கள், வீல்பரோ, கூடுதலாக தனிப்பட்ட இடங்களில் மாத்திரம் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பாவிக்கும் கை வண்டில்கள் வர்த்தக நடவடிக்கைக்காகப் பாவிக்கப்படும் கை வண்டில்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

இந்த அட்டவணையில் வர்த்தக விடயங்கள் என்றால் விற்பனைக்காக அல்லது வேறு வகையில் அல்லது ஏதாவது ஒரு வர்த்தக நிறுவனம், அல்லது தொழிற்சாலைக்கு ஏதும் பொருட்கள் அல்லது எழுத்து அல்லது அச்சிடப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல அல்லது போக்குவரத்து இதிலடங்கும்.

6-259/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.